பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 வைகாசி 19 திங்கட்கிழமை (02-06-1997) UTHAYAN - A Lively National Tamil Daily ஒளி: 186

### மின்மாற்றி சேதம்!

மட்டக்களப்பு, ஜூன் 2

மட்டக்களப்பு ஒட்டமாவடியில் நேற்று முன்தினம் மாலை 6.45 மணியளவில் மின் மாற்றி ஒன்றை இனந் தெரியாதவர்கள் துப்பாக்கியால் சுட்டு சேதமாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து அப்பகுதி இருளில் மூழ்கியுள்ளது.

கடந்த ஒரு வாரத்தில் இப்பகுதியில் சேதமாக்கப்பட்ட நான்காவது மின்மாற்றி இதுவாகும். (உ-21-3)

# வடக்குப் பாதையைத் திறக்க பல மாதங்கள் செல்லலாம்!

## காலம் முக்கியமானதல்ல என்று படை உயர் வட்டாரங்கள் கருத்து

கொழும்பு ஜூன் 2

"வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரையான பாதையை முழுக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு மேலும் பல மாதங்கள் கூடச் செல்லலாம். காலம் முக்கியமானதல்ல; எடுத்த காரியத்தை முடிப்பதே பிரதானமானதாகும்."

--இவ்வாறு படை உயர் வட்டாரங்கள் தெரிவித்தன.

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கின்றார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள துருப்புகள் மேலும் முன்னேறுவதில் எதிர்கொள்ளும் தடைகள் குறித்து இராணுவ உயர் மட்டத்தில் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையின்போது கைப்பற்றும் பிரதேசங்களைத் தக்க வைப்பதற்காக அப்பிரதேசம் மூன்று வலயங்களாகப் பிரிக்கப்பட்டு அதன் பொறுப்பு பொலீஸ், கடற்படை, விமானப்படை ஆகியவற்றிடம் ஒப்படைக்கப்பட்டது.

கடற்படை, விமானப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரிலிருந்து 1,200 பேர் வருவர்

மட்டக்களப்பு, ஜூன் 2

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிகளில் இருந்து மன்னாருக்கு வந்துள்ள சுமார் 3 ஆயிரத்து 500 பேரில், யாழ்ப்பாணம் செல்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ள ஆயிரத்து 200 பேரை நாளை முதல் 'தராகி' கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மன்னார் அரச அதிபர் எஸ்.எம். குறூஸ் தெரிவித்தார்.

நாளை முதல் ஐந்து தடவைகள் இக் கப்பலை சேவையில் ஈடுபடுத்தி, அகதிகளை

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கு புதனன்று மருந்துப் பொருள்கள்

மட்டக்களப்பு, ஜூன் 2

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதிகளுக்கு நாளை மறுதினம் மருந்துப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட இருப்பதாக வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.

மூன்று மாதங்களுக்குத் தேவையான மருந்துப் பொருள்களை எடுத்துச் செல்ல பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியதை அடுத்து, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அல்லது அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் ஊடாக இந்த மருந்து வகைகளை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் சொன்னார்.

அதே நேரம் வவுனியாவிலிருந்து முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கு நேற்று இருபது லொறிகளில் உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

## பொலீஸாருக்கு ஆசிரிய நியமனம்!

மட்டக்களப்பு, ஜூன் 2

வடமத்திய மாகாண எல்லைப் பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள பொலீஸார், ஊர்காவல் படையினரில் ஐந்நூறு பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்க வடமத்திய மாகாண கல்வியமைச்சு முடிவு செய்துள்ளது.

அநுராதபுரம், பொலன்னறுவை மாவட்டங்களின் எல்லைப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் பணியாற்ற ஆசிரியர்கள் மறுப்பதாலும் —

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வலையிறவு பாலத்தில் கண்ணிவெடிச் சம்பவம்

மட்டக்களப்பு, ஜூன் 2

மட்டக்களப்பு வலையிறவு—வவுணதீவு பாலத்தில் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தில் இரு இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் அவர்கள் பயணம் செய்த ஜீப் வாவிக்குள் வீழ்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பாலத்தின் இருபக்கங்களிலும் பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டு படையினர் காவல் இருந்து வந்தனர்.

விடுதலைப் புலிகள் வாவி வழியாக ஊடுருவி இத்தாக்குதலை நடத்தியிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

## சடலத்தை ஏற்க புலிகள் மறுப்பு

மட்டக்களப்பு, ஜூன் 2

மட்டக்களப்பு சந்திவெளியில் நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்ட — விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் என்று கூறப்பட்ட — ஒருவரின் சடலத்தை ஏற்க விடுதலைப்புலிகள் மறுத்து விட்டதாகத் தெரிவிக்கப்படு

( 8 ஆம் பக்கம் பார்க்க)

### மன்னாரில் அறுவர் பலி

மணிலா, ஜூன் 2

மன்னார் மாவட்டம் பேசாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இராணுவம் மேற்கொண்ட தாக்குதலில் ஆறு பேர் கொல்லப்பட்டதாகவும் மேலும் பலர் காயமடைந்ததாகவும் விடுதலைப் புலிகளின் செய்திகளை மேற்கோள்காட்டி செய்தி ஏஜன்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது. (உ-5)

### முச்சந்தி முரளி



அப்ப... படிப்பிக்கிற உத்தியோகம் படு சிப்பாய் போச்சுது எண்டுசொல்லுங்கோ...!

### 2 சிப்பாய்கள் தலைமறைவு

மட்டக்களப்பு, ஜூன் 2

மன்னார் வங்காலை இராணுவ முகாமில் பணியாற்றிய இரு இராணுவத்தினர் தம் வசம் இருந்த 'ரி 56' ரக ஆயுதங்களுடன் தலைமறைவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-21-3)

## பெரும் தாக்குதலுக்கு புலிகள் முஸ்தீபு!

கொழும்பு, ஜூன் 2

தற்போதைய வன்னி இராணுவ நடவடிக்கையின்போது கைப்பற்றிய பிரதேசங்களை துருப்புக்கள் பலப்படுத்தி வரும் அதேநேரத்தில்—

அலை அலையாக வந்து பெருந் தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளும் நோக்கத்துடன் விடுதலைப் புலிகள் வன்னியில் திரள்வதாகத் தகவல் கிடைத்துள்ளது என்று பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'சண்டே லீடர்' ஆங்கில வார இதழ் தெரிவித்தது.

பாதுகாப்புப் படையினர் கைப்பற்றிய பிரதேசங்களில் தற்போது பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள கடற்படை காலாட்படையின் 4படையணிகளும் போர் பயிற்சி பெற்றவை என்று தெரிவிக்கப்படுகிறது. தேவை ஏற்படின் அப்படையணிகள் போர் முனைக்கு அனுப்பப் படலாம்.

தற்சமயம் படையினர் நிலைகொண்டுள்ள ரம்பைக் குளத்தில் இருந்து மாங்குளம் 20 மைல் தூரத்தில் உள்ளது. மாங்குளத்தை கைப்பற்ற படையினர் நடவடிக்கை ஆரம்பிக்கும் போது அதைத் தடுத்துப் போராட தற்கொலைப் படையினர் உட்பட மூவாயிரம் புலிகள் தயார் நிலையில் உள்ளனர் என்று கூறப்படுகிறது.

—இப்படி அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது. (உ-150-3)

## ஆயுதக் கப்பல் வரும்போது புலிகள் தாக்குதல் நடத்துவர்!

### புலனாய்வுத் தகவல்கள் கூறுகின்றன

கொழும்பு. ஜூன் 2

விடுதலைப் புலிகளுக்கான ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு கம்போடியாவில் இருந்து புறப்பட்டதாகக் கருதப்படும் கப்பல் கிழக்கில் உள்ள வாகரைக் கரைக்கு வந்தடையும் நேரத்தில் படையினரின் ஏதாவதொரு முகாம் மீது பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தப் புலிகள் திட்டமிட்டிருக்கிறார்கள் என்று புலனாய்வுத் தகவல்களை மேற்கோள் காட்டி பாதுகாப்பு வட்டாரங்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### இனப்பிரச்சினை விடயம்:

## பிரிட்டிஷ் அரசாங்கம் ரணிலுக்கு அழைப்பு!

கொழும்பு, ஜூன் 2

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் ஐ. தே. கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க எதிர் வரும் 7 ஆம் திகதி லண்டன் பயணமாகிறார்.

கொழும்பில் உள்ள பிரிட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BARATHY

சித்தன்கேணி

## A|L 99 புதிய பிரிவு

**ஆரம்பம்:- 3 - 6 - 97 செவ்வாய் 3 மணி**

எமது தனித்துவம் பெற்ற ஆசிரியர் குழுவினர்

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. சண் |
| வர்த்தகம் | — | திரு பசில் |
| புள்ளிவிவரவியல் | — | திரு. தவசேகர் |
| கணக்கியல் | — | திரு. சதீஸ் |
| அளவையியல் | — | திரு. R P சர்மா |
| தமிழ், இந்துநாகரிகம் | — | திரு. பாலா |
| இந்துசமயம் | — | திரு. சிவானந்தன் |
| நாடகமும் அரங்கியலும் | — | திரு கந்தவேள் |

புதிய அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்

(47573)



## பங்குடைமை வியாபார
# பங்காளர் தேவை

அரச மருந்தாக்கற் கூட்டுஸ்தாபனத்திலிருந்து (S P.C.) மருந்து தருவித்து விநியோகிப்பதில் ஏற்படுகின்ற நடைமுறைப் பிரச்சினையினால் நாம் பங்குடைமை வியாபாரத்தை ஆரம்பிக்க நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளோம்.

எமது மன்ற அங்கத்தவர்களிட மிருந்து பங்குகளைப் பெற்று சட்டப்படி பங்குடைமை வியாபாரத்தை ஆரம்பிக்கவுள்ளோம். இவ்வறிவித்தல் கிடைத்து 3 நாள்களுக்குள் தங்கள் பங்கு உரிமையை உறுதிப் படுத்திக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு: S P. C யின் மூன்றாம் தொகுதி மருந்துகள் எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. ஆகவே உங்கள்ஓ—ரை உடன் பதிவு செய்துகொள்ளவும் (இவ்வார இறுதிக்குள் விநியோகிக்கப் படும்.)

மேலதிக விவரங்களுக்கு:

வடபிராந்திய

## யாழ் ஆங்கில மருந்து வணிகர் மன்றம்

470. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/849)



## யாழ்.
## லயன்ஸ் கழகம்
## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

21 - 05 - 1997 இல் நடைபெறவிருந்த மேற்படி சீட்டிழுப்பு எதிர்வரும் 21 - 06 - 1997 சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு நடைபெறும்.

- தலைவர்

(சி/850)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராஜலட்சுமி கனகசபை

சுழிபுரம் செட்டிகுறிச்சியைச் சேர்ந்த இராஜலட்சுமி கனகசபை 1 - 6 - 97 இல் காலமானார்.

அன்னார் சண்முகநாதனின்(பொலிஸ் சார்ஜன்ட்) அருமை மனைவியும், ரதிரட்ணா, ராஜசுசினா, ராஜவதனா ஆகியோரின் அன்புத் தாயாரும், சோதிலிங்கம் (எழுதுநர், யாழ். தபால் நிலையம்), கிரிதரன் ஆகியோரின் அருமை மாமியும், டசிகரன், கார்த்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை 2 - 6 - 97 சுழிபுரம் வடக்கு. செட்டிகுறிச்சி. சுழிபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் எனபதை உறவினர், நண்பர்கள் எல்லோருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
சண்முகநாதன்
(கணவர்)

(47574)

## திருமதி விமலா சணமுகதாசன்

வீமன்காமம் தெல்லிப்பளையைச் சேர்ந்த விமலா சண்முகதாசன் 31 - 05 - 97 அன்று வவுனிக்குளத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகாலிங்கம், திருமதி தனலட்சுமி மகாலிங்கம் ஆகியோரின் அன்பு மகளும், வல்லிபுரம் சண்முகதாசனின் (நீர்ப்பாசன திணைக்களம், வவுனிக்குளம்) அன்பு மனைவியும், சஞ்சு,சரண் சஞ்சீவ் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையாகக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தகவல்:
ம. சிறிகாந்தன் (ராசன்)
(சகோதரன்)

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(47570)

# ஆண் பொலிஸார் யுத்த முனைக்கு!
# பொலீஸ் பணிக்கு பெண் பொலீஸார்!!

யுத்த முனைகளுக்கு வெளியே நாட்டின் பல்வேறு பகுதிகளில் சேவையில் ஈடுபட்டுள்ள, ஆண் பொலீஸாரை அங்கிருந்து அழைத்து, தற்போது பாதுகாப்புப் படையினர் கைப்பற்றும் பிரதேசங்களைத் தக்க வைக்கும் பணியில் ஈடுபடுத்தவும் —

அந்த ஆண் பொலீஸார் தற்போது பணிபுரியும் இடங்களுக்கு அவர்களுக்குப் பதிலாகப் பெண் பொலீஸாரை அனுப்பவும் —

அரசு முடிவு செய்துள்ளது.

இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு வசதியாக கூடுதல் பெண் பொலீஸாரை சேவையில் சேர்த்துக் கொள்வதற்கு பொலீஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பொலீஸ் சேவையில் இருந்து ஆண் பொலீஸார் தப்பி ஓடுவதால், போர் முனைக்குப் பொலீஸாரை அனுப்ப முடியாத நிலை இருப்பதும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

தற்போது சேவையில் உள்ள ஆண் பொலீஸாரில் பெரும் எண்ணிக்கையானோரைப் போர் முனைக்கு அனுப்பிவிட்டு அவர்களது தற்போதைய இடங்களுக்கு பெண் பொலீஸாரை நியமிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

களுத்துறை பொலீஸ் பயிற்சிக் கல்லூரியில் தற்சமயம் பயிற்சி பெற்ற 456 பெண் பொலீஸார் வெளியேறுவதாகவும் —

அதன்பின் 532 பெண் பொலீஸார் பயிற்சிக்கு அனுப்பப்பட இருப்பதாகவும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-150)

# மன்னார், திருமலைக்கு இன்று கப்பல் சேவை

காங்கேசன்துறையில் இருந்து இன்று திருகோணமலைக்கும், மன்னாருக்கும் பயணிகள் கப்பல் சேவை இடம்பெறும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.

மன்னாருக்கு 290 பயணிகளை 'தராகி' கப்பலில் ஏற்றிச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேசமயம் நாளை திருகோணமலைக்கு 'நியூகோ எண்டியூரன்ஸ்' கப்பல்செல்லவுள்ளது.

இக்கப்பல்களில் பயணம் செய்ய பெயர் பதிவு செய்தவர்களை இன்று காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப் பட்டுள்ளது, (உ-3)

## அ. அட்டை விநியோகம்

யாழ். குருநகர் கிழக்கு (ஜே/70) கிராம அலுவலர் பிரிவு விசேட அடையாள அட்டைகள் இன்று திங்கட்கிழமை காலை 11.00 மணி முதல் குருநகர் இராணுவ முகாம் பணிமனையில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## சமய சந்திகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 2

காரைநகர் திக்கரை முருகன் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை கார்த்திகைத் திருவிழா நடைபெறவுள்ளது. (ஐ)

★ ★ ★

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த பஞ்ச குண்ட நவோத்திர சங்காபிஷேகம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

சங்காபிஷேக ஆரம்பக் கிரியைகள் நேற்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகின.

(ஐ-12)

★ ★ ★

அனலைதீவு நயினாகுளம் ஹரிகரபுத்திர ஐயனார் தேவஸ்தான ஜீர்ணோத்தாரண புனராவர்த்தன பிரதிஸ்டா நவகுண்ட மகாயாக மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 6. 30 மணி முதல் நடைபெறும்.

கிரியைகள் இன்று திங்கட் கிழமை ஆரம்பமாகும். எதிர்வரும் 7 ஆம் திகதி நண்பகல் 12 00 மணி தொடக்கம் எண்ணெய்க்காப்பு நடைபெறும்.

கிரியைகளை ஊரெழு வேதாகம மாமணி, சிவஸ்ரீ பாலவைத்தியநாத சிவாச்சாரியர் நெறிப்படுத்துவார்.

மகாகும்பாபிஷேக தினத்தன்று "துர்க்காதுரந்தரி" செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள்பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மா ஆகியோர் ஆசியுரை வழங்குவர், (ஐ-117)

## பருத்தித்துறை நகர வரலாறு நூலுருப் பெறும்

வடமராட்சி, ஜூன் 2

பருத்தித்துறை நகரத்தின் வரலாறு நூலுருப் பெறவுள்ளது.

இந் நகரத்தின் வரலாற்றை இப்பகுதியின் மூத்த பிரஜையும், பண்டிதருமான மு. ஏரம்பமூர்த்தி எழுதி வருகிறார்.

இவ்வருட இறுதிக்குள் இவ் வரலாற்று நூல் வெளியிடப் படும். (ஐ-173)


# ஈசன் கல்வி நிலையம்

கோண்டாவில்.

## 99 A/L கணித, விஞ்ஞான பிரிவு II

| | | |
|---|---|---|
| பௌதிகவியல் | — | திரு. குமரன் |
| இரசாயனவியல் | — | திரு றமேஸ் |
| தூய, பிரயோக கணிதம் | — | திரு கருணா |
| தாவரவியல் | — | தனித்துவமான ஆசிரியர் |
| விலங்கியல் | — | திரு. கெங்காதரன் |

## 99 A/L கலை, வர்த்தகப் பிரிவு II

| | | |
|---|---|---|
| வர்த்தகம் | — | திரு. பசில் |
| கணக்கியல் | — | திரு. வன்னியசிங்கம் |
| பொருளியல் | — | திரு. இராஜேஸ்வரன் |
| வணிகபுள்ளிவிவரவியல் | — | திரு. தவசேகர் |
| அளவையியல் | — | திரு. R P. சர்மா |
| தமிழ் | — | திரு. லிங்கம் |
| இந்துநாகரிகம் / இந்து சமயம் | — | திரு. சிவானந்தன் |
| நாடகமும் அரங்கியலும் | — | திரு. சந்திரன் |

## O/L DAY CLASS

எமது தனித்துவமான ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. T. சுதாகர் |
| கணிதம் | — | திரு. கணேந்திரன் |
| தமிழ் | — | திரு. லிங்கம் |
| ஆங்கிலம் | — | பிரபல ஆசிரியர் |
| சமூகக்கல்வி | — | திரு. முரளி |
| வர்த்தகம் | — | திரு. ஜெயந்தன் |
| சமயம் | — | திரு. செந்தில் |

**ஆரம்பம்: 05 - 06 - 97**
காலை 8-00 மணி

★ அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை.

தொடர்பு:
அலுவலகம்.

(47260)



# தெஸ்பியன் கல்வி நிலையம்

காங்கேசன் துறை வீதி, இணுவில்.

## A/L 99
## கலை, வர்த்தக வகுப்புக்கள்

**30 - 05 - 97 ஆரம்பமாகி விட்டன**

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. மோகன் |
| தமிழ் | — | திரு. N. பாலா |
| இந்து நாகரிகம் | — | திரு. S. சோதி |
| இந்து சமயம் | — | திரு. S. சோதி |
| அளவையியல் | — | திரு. R P. சர்மா |
| அரசியல் | — | திரு. திருமுருகன் |
| நாடகமும் அரங்கியலும் | — | திரு. க. ஸ்ரீகந்தவேள் |
| புவியியல் | — | திரு. க. ஹரிகரசக்தி |
| கணக்கியல் | — | திரு. S. M. லால் |
| வர்த்தகம் | — | திரு. க. முரளி |
| பள்ளிவிவரவியல் | — | திரு. S. திரிகரன் |

நிர்வாகி

(47571)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் [illegible] நூலகம்.

# வடக்கு ஆப்கானிலிருந்து தலிபான் பின் வாங்கியது!

## முக்கிய நகரங்கள் பறிபோயின

காபூல், ஜூன் 2

ஜெனரல் அகமத் ஸா மசூத் தலைமையிலான எதிர்ப்புப் படைகளின் கடும் தாக்குதல்களைச் சந்தித்த தலிபான் மக்கள் படையினர் வடக்கு ஆப்கானிஸ்தானில் இருந்து பின் வாங்கியுள்ளனர்.

தலைநகர் காபூலை வடபகுதியுடன் இணைக்கும் நெடுஞ்சாலையில் கடந்த வாரம் முன்னேறி கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளைக் கைப்பற்றித் தக்க வைத்திருந்த தலிபான் படைகள் கடைசியாக நடந்த சண்டையில் படு தோல்வியைச் சந்தித்துள்ளன,

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஜபால்வாஸ் சிராஜ் நகரத்தையும் தலிபான் படைகள் இழந்துள்ளன.

## வெடி விபத்து: சீனாவில் 50 பேர் பலி!

பீஜிங், ஜூன் 2

சீனாவின் வடகிழக்கு மாகாணத்தில் நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட வெடிச் சம்பவத்தில் 50-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

கடந்த புதனன்று இடம் பெற்ற இந்த வெடிப்புச் சம்பவத்துக்கான காரணம் எதுவும் தெரியவரவில்லை.

(ஐ)

## ஜனதாதள் கட்சி தேர்தல்பணியில் முதல்வர் லாலு தலையிடக்கூடாது

### நீதிமன்றம் உத்தரவு

புதுடில்லி, ஜூன் 2

ஜனதாதள் கட்சித் தலைவர் பதவிக்கான தேர்தல் நடவடிக்கைகளில் தற்போதைய கட்சித் தலைவரும் போட்டியாளருமான லாலு பிரசாத் யாதவ் தலையிடாமல் விலகி இருக்க வேண்டும் என்று புதுடில்லி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜனதாதள் கட்சியின் தேர்தல் அதிகாரி சமத்ரே தாக்கல் செய்திருந்த மனுவின் அடிப்படையில் இந்த உத்தரவு விடுக்கப்பட்டிருக்கிறது.

கட்சித்தலைவர் தேர்தலை பாட்னாவில் நடத்துவது தொடர்பாகத் தனது யோசனை ஏன் செயற்படுத்தவில்லைஎன்று விளக்கம்கேட்டு முதல்வர் லாலு பிரசாத் யாதவ் தேர்தல் அதிகாரிக்கு நோட்டீஸ் ஒன்றை அனுப்பியிருந்தார்.

(ஐ-5)

## பிரான்ஸில் இறுதிக்கட்ட வாக்களிப்பு

பாரிஸ், ஜூன் 2

பிரான்ஸில் பொதுத் தேர்தலின் இறுதிச் சுற்று வாக்களிப்பு நேற்று ஆரம்பமானது.

இலங்கை நேரப்படி நேற்று நண்பகல் 12.00 மணிக்கு ஆரம்பமான வாக்களிப்பு நள்ளிரவு 12.00 மணி வரை நடைபெற்றது.

(ஐ-5)

## காணாமற்போன நாயைத்தேடி 'இன்ரநெற்' மூலம் விளம்பரம்

லண்டன், ஜூன் 2

தான் ஆசையோடு வளர்த்து வந்த நாய் காணாமற்போனதை அடுத்து அதனைத் தேடிக் கண்டுபிடிக்குமாறு "இன்ரநெற்" எனப்படும் கணனித் தகவல் வலை மூலம் விளம்பரம் செய்துள்ளார் பிரிட்டனைச்சேர்ந்த ஒருவர்;

'போனி' என்று பெயரிட்டு அன்புடன் வளர்த்து வந்த இவரது நாய் திடீரெனக் காணாமற் போய்விட்டது. அதனைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் அவர் தோல்வியடைந்தார்.

"இன்ரநெற்றில்" விளம்பரம் செய்தால் அதைப் பார்த்து யாராவது தனது நாயை தன்னிடம் ஒப்படைப்பார்கள் என்று நினைத்த அவர், அந்த நாயின் 50 விதமான வண்ணப்படங்களை எடுத்து தன் நாய் குரைக்கும் சத்தத்தினையும் பதிவு செய்து விளம்பரம் ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

(ஐ-5)

## கிழக்கு திமோரில் பெரும் கலவரம்!

### 17 படையினர் பலி!!

இந்தோனேசியாவின் கிழக்கு திமோர் மாகாணத்தின் தலைநகரில் அரசபடையினர் மீது கெரில்லாக்கள் நடத்திய தாக்குதலில் 17 படையினர் பலியாகியுள்ளனர்.

பொதுத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை அடுத்து இரு நாள்களாக ஓய்ந்திருந்த

உலக அரங்கில்

கலவரம் மீண்டும் அங்கு வெடித்துள்ளது,

சுயாட்சி கோரிப் போராடிவரும் சுதந்திர ஆதரவுக் கெரில்லாக்கள் அரச படைகள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

கலவரங்கள் இடம்பெற்ற பகுதிகளுக்கு அரச படைகள் மேலதிகமாக அனுப்பப்பட்டுள்ளன,

இதேவேளை—

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் பல முறைகேடுகள் இடம் பெற்றிருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இதற்கிடையில்—அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள அதிபர் தேர்தலில் போட்டியிடப் போவதாக அதிபர் சுஹார்ட்டோ அறிவித்திருக்கிறார்.

(ஐ)

## தமிழக மீனவரை பாதுகாக்கக்கோரி ஒரு லட்சம் தபால் அட்டைகள் பிரதமர் குஜ்ராலுக்கு அனுப்பப்படும்

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் நடத்திவரும் தாக்குதல்களை நிரந்தரமாகத் தடுக்கக் கோரி பிரதமர் ஐ. கே. குஜ்ராலுக்கு ஒரு லட்சம் தபால் அட்டைகளை அனுப்பிவைப்பது என்று அகில இந்தியமீனவர் சங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கைத் தரப்பில் இருந்து சிறு குண்டு கூட தமிழக மீனவர்களின் பக்கம் பாயக்கூடாது என இலங்கையை எச்சரிக்க வேண்டும் என்றும்—

இந்திய—இலங்கை எல்லையில் தமிழக மீனவர்களின் பாதுகாப்புக்காக இந்தியக் கடற்படையின் ஒரு பிரிவை சேவைக்கு அமர்த்த வேண்டும் என்றும் இத் தபால் அட்டைகளில் பிரதமர் குஜ்ராலுக்கு கோரிக்கை விடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## அமெரிக்கா எச்சரிக்கை

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்டலின் அல்பிரைற் அனைத்துலக முயற்சிகளுக்கு ஒத்துழைக்காவிட்டால் சேர்பியா, குரோஷியா ஆகியவை மீது தடைகள் விதிக்கப்படும் என்று எச்சரித்துள்ளார்.

ஸீரொக்றெற் நகரில் குரோஷிய அதிபரையும் சேர்பிய அதிபரையும் சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அல்பிரைற், குரோஷிய - சேர்பிய நடவடிக்கைகள் தமது நாட்டுக்கு மனநிறைவு அளிக்கவில்லை என்று தெளிவாகக் கூறினார்.

## வேண்டுகோள்

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் நேட்டோ விரிவாக்கத்தை ஆதரிக்கும்படி தமது நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.


வெஸ்ற்போயின்ற் இராணுவக் கல்லூரியில் உரையாற்றிய அவர், ஐக்கிய ஐரோப்பா, அமெரிக்காவின் பாதுகாப்புக்கு நன்மையளிக்கும் என்று தெரிவித்தார்.

(ஐ)

உ

ஓம் சக்தி

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்



## 1997 ஆம் ஆண்டு உயர் திருவிழா

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 06 - 06 - 1997 | வெள்ளிக்கிழமை பகல் 12-00 மணி |
| சப்பறம் | 18 - 06 - 1997 | புதன்கிழமை இரவு |
| தேர் | 19 - 06 - 1997 | வியாழக்கிழமை பகல் 10-00 மணி |
| தீர்த்தம் | 20 - 06 - 1997 | வெள்ளிக்கிழமை காலை |
| கொடியிறக்கம் | 20 - 06 - 1997 | வெள்ளிக்கிழமை இரவு |
| தெப்பத்திருவிழா | 21 - 06 - 1997 | சனிக்கிழமை இரவு |

அன்னையின் அருள்பெற அனைவரும் வருகவே.

— அறங்காவலர் சபையினர்

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

## பாராட்டுக்கள்

பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியிலிருந்து
1996 க. பொ. த (சா/த) தேர்வில் தோற்றி
ஏழு பாடங்களிலும் விசேட சித்தியும் (7D)
ஆங்கில இலக்கியத்தில் திறமைச் சித்தியும் (C)
பெற்ற மாணவன்

செல்வன்
செல்வகணேசபிள்ளை வத்சலன்

அவர்களுக்கு
எம் இதயங் கனிந்த பாராட்டுக்கள்

ஐயனார் கலட்டி மக்கள்
பருத்தித்துறை.

(சி-848)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ மட்டுவில் வடக்கில் சம்பவம்:

# சோதனையிடப் போவதாகக் கூறி வீட்டுக்குள் புகுந்து கொள்ளை!

## தப்பிச் சென்ற திருடர்கள் மீது வேட்டு!

தென்மராட்சி ஜூன் 2

இரவு வேளை வீட்டுக்குள் நுழைந்து சோதனையிடப் போவதாகக் கூறிய இனந்தெரியாத நபர்கள் வீட்டில் இருந்தோரின் கண்களைக் கட்டி விட்டு அவர்கள் அணிந்திருந்த தங்க நகைகளை அபகரித்துக் கொண்டு தப்பியுள்ளனர்.

மட்டுவில் வடக்கில் உள்ள ஒரு வீட்டில் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில்இச் சம்பவம் இடம் பெற்றது.

வீட்டில் இருந்தோரின் கண்களைக் கட்டிவிட்டு நகைகளை அபகரித்த நபர்கள் அவர்களை அறை ஒன்றினுள் அடைத்துப் பூட்டி விட்டு வீட்டில் இருந்த ஏனைய பொருள்களையும் கொள்ளையிட முயன்றனர் என்றும் -

அவ்வேளை பின் கதவு ஒன்றினால் வெளியே வந்த வீட்டுச் சொந்தக்காரர் கூக்குரலிட்டதை அடுத்து விழித்துக் கொண்ட அயலில் வசிப்போர் சத்தமிட்டதையடுத்து அந்த நபர்கள் தப்பியோடினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அந்த நபர்கள் தப்பியோடிய சில நிமிடங்களில் வீதியில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதன் பின்னர் உழவு இயந்திரம் ஒன்று அப்பகுதிக்கு வந்து திரும்பியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

காலையில் வீதியோரத்தில் இரத்தக் கறைகளையும், ஒருசோடி செருப்பையும் அயலவர்கள் கண்டுள்ளனர். (ஐ - 117)

# சென்றல் முகாம் சம்பவம்: விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவு

மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் அம்பாறை மாவட்டத்துக்கும் இடையில் உள்ள சென்றல் முகாம் 11 ஆம் கொலனியில் தமிழ்ப் பெண் ஒருவர் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி பொலீஸ்மா அதிபருக்கு அவசர உத்தரவு பிறப்பித்துள்ளார்.

முருகேச பிள்ளை கோணேஸ்வரி என்ற இந்தப் பெண் கற்பழிக்கப்பட்டுக் கொல்லப்பட்டது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் மீது உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது ஈ.பி.டி.பி. தூதுக்குழு வலியுறுத்தி இருந்தது.

கடந்த வியாழக்கிழமை மாலை ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மளிகையில் இடம் பெற்ற இந்தச் சந்திப்பில் ஈ.பி.டி.பி. யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ். சிவதாசன் எஸ். தங்கவேல், ப. இராசமாணிக்கம் மற்றும் கி. தவராசா, டாக்டர் கா. விக்கினேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இரண்டரை மணி நேரம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது சென்றல் முகாம் சம்பவம் உட்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஈ.பி.டி.பி. குழுவினர் ஜனாதிபதியுடன் விவாதித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-21)

## பெற்றோல் விநியோகம் நிறுத்தம்

வடமராட்சிப் பகுதியில் உள்ள எரிபொருள் நிலையங்களில் கடந்த சில தினங்களாக பெற்றோல் விநியோகம் இடம்பெறவில்லை.

பெற்றோலை வாகனங்களுக்கு பயன்படுத்தும் வாகனச் சொந்தக்காரர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-173)

## பெண் மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

செப்ரிசீமியாநோயின் தாக்கத்திற்குள்ளாகி, யாழ்.ஆஸ்பத்திரி அதிதீவிரசிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்றுவந்த இளம் பெண் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை அங்கு மரணமானார்.

# விதை உருளைக்கிழங்கை உரிய வேளையில் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 2

97,98 காலபோகத்திற்கான விதைஉருளைக்கிழங்கை இம் முறை உரிய காலத்தில் பெற்று விவசாயிகளிற்கு வழங்குவதற்கு நல்லூர் கமநல சேவைகள் கேந்திரநிலையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

விதை உருளைக்கிழங்கு தேவையானோர் விவசாய மேளனங்களுடன் தொடர்பு கொண்டு சம்மேளனத்தின் தலைவரது அல்லது செயலாளரது சிபார்சுடன் கமநல சேவைகள கேந்திர நிலையத்துடன் தொடர்புகொள்ள வேண்டும் என்றும் -

இது தொடர்பான விண்ணப்பப்படிவங்களைப்பூர்த்தி செய்து விதை உருளைக் கிழங்கு விநியோகிக்கும் போது தேவையான முற்பணத்தைச் செலுத்தி விதை உருளைக்கிழங்குகளைப் பெறத் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்றும்— தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் முறை காலபோகத்திற்குத் தேவையான விதை உருளைக்கிழங்குகள் உரிய நேரத்தில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால் இதன் மூலம் உரிய பலன் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது (ஐ - 5)

## கால் நடை வைத்தியசாலை திறப்பு

அராலி, ஜூன் 2

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் உதவியுடன் அராலி கிராமத்துக்கான கிராமிய கால்நடை வைத்தியசாலை அராலி மத்தி கிராம உத்தியோகத்தர் அலுவலகத்துக்கு அருகில் கடந்த வெள்ளிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

மேற்படி வைத்தியசாலையில் பணியாற்றுவதற்கு இரு உத்தியோகத்தர்களுக்கு கால்நடை அபிவிருத்தி சுகாதார திணைக்களம் பயிற்சி வழங்கியுள்ளது. (ஐ-12)

# யாழ். மாவட்டத்துக்கு 28 டாக்டர்கள் நியமனம்

திருநெல்வேலி, ஜூன் 2

யாழ். போதனாவைத்தியசாலை உட்பட யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு நேற்று தொடக்கம் 28 டாக்டர்கள் கொழும்பிலுள்ள சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இவர்களது நியமனம் பற்றி யாழ். சுகாதார சேவை பிரதி மாகாண பணிப்பாளர் பணிமனைக்கு நேற்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அண்மையில் எம். பி பி. எஸ். இறுதிப்பரீட்சையில் சித்தி பெற்று உள்ளகப் பயிற்சியை பூர்த்தி செய்தவர்களான மேற்படி 28 டாக்டர்களுக்கும் முதல் நியமனம் யாழ். சுகாதார பிராந்தியத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ். போதனா வைத்தியசாலைக்கு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான டாக்டர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்துக்கு சுகாதாரத்திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட டாக்டர்களில் 24 பேர் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் என்றும் 4 பேர் மட்டுமே தமிழர்கள் என்றும் நம்பகமாக அறியவருகிறது. (இ–135)

# காப்புறுதி முகவராக நடித்து வீடுகளில் திருடியவர் கைது!

கொழும்பு, ஜூன் 2

உயர் அதிகாரிபோல் உடையணிந்து வீடுகளுக்குச் சென்று வீட்டுச் சொந்தக்காரர்கள் இல்லாவிடின் அங்கிருந்து பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்து சேகரித்து வந்த போலி காப்புறுதி முகவர் ஒருவர் அண்மையில் கொள்ளுப்பிட்டி பொலீசாரால் கைதுசெய்யப்பட்டார்.

விலை உயர்ந்த கைப்பையில் காப்புறுதி ஆவணங்களைக் கொண்டு வசதியான வீடுகளுக்குச் செல்வது இவரது வழக்கமாம். வீட்டில் உரிமையாளர் இல்லையெனில் இவர் தன துகைவரிசையைக் காட்டி விடுவாராம். (ஐ-10)

## ஏஜென்ஸி தபாலகம் அமைக்க முயற்சி

வடமராட்சி, ஜூன் 2

நெல்லியடி— கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஏஜென்ஸி (முகவர்) தபால் நிலையம் ஒன்றை நெல்லியடியில் ஆரம்பிக்கவுள்ளது.

ஏஜென்ஸி தபால் நிலையத்தை ஆரம்பிப்பதற்காக தபால் மா அதிபருக்கு இச் சங்கம் விண்ணபத்தை அனுப்பி வைத்துள்ளது.

(ஐ-173)

## ஆரம்பக்கல்வி அபிவிருத்திச் சங்கம்

திருநெல்வேலி, ஜூன் 2

யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பக்கல்வியை மேம்படுத்து முகமாக ஆரம்பக் கல்வி அபிவிருத்திச் சங்கம் என்ற பெயரில் சங்கமொன்று கடந்த சனியன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

ஆரம்பக்கல்வி நிதியம் ஒன்றை ஏற்படுத்தி வசதி குறைந்த மாணவர்களுக்கு உதவிபுரிவதற்கும், ஏனைய கல்வி ஊக்குவிப்புகளை உருவாக்கிக் கொடுப்பதற்கும் இச் சங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று கல்லூரி அதிபர் க. இராஜதுரை தெரிவித்தார். (ஐ-135)

## வேலி மறைப்புகள் நீக்கம்

திருநெல்வேலி, ஜூன் 2

மானிப்பாயில் இருந்து சண்டிலிப்பாய் வரை செல்லும் பிரதான வீதியின் இரு பக்கங்களிலுமுள்ள வேலிகளில் கிடுகுகள், ஓலைகள் அகற்றப்பட்டு வருகின்றன, அத்துடன் வீதி ஓரத்திலுள்ள பற்றைகள் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. மரக்கிளைகளும் வெட்டி அகற்றப்பட்டுள்ளன. (ஐ-135)

# ஈழத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கு உகந்த சூழ்நிலை இலங்கையில் நிலவவில்லை

## நோர்வே மாநாட்டில் வலியுறுத்து

பேர்ஹென், ஜூன் 2

வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியவர்களைத் திருப்பி அனுப்பக் கூடிய சூழ்நிலை இலங்கையில் நிலவவில்லை.

யாழ்ப்பாணத்தில் பாடசாலைகளும் அரசாங்க நிறுவனங்களும் வழமை போல் செயற்பட்டாலும் அங்கு ஒரு குழப்பகரமான நிலையே இன்னும் நீடிக்கிறது.

எனவே இது விடயத்தில் அங்குள்ள நிலைவரம் குறித்த யு.என்.எச் சீ. ஆரின் நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது.

இலங்கையில் இடம் பெறும் வன் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நோர்வேயில் கடந்த புதனன்று நடந்த மாநாட்டில் இவ்வாறு வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

நோர்வேயின் பேர்ஹென் நகரில் நடைபெற்ற இந்த மாநாட்டில்— அகதிகளுக்கான ஐ.நா. தூதரக பிரதிநிதிகளும், பிரிட்டிஷ் அகதிகள் கவுன்ஸில் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

மேற்கு நாடுகளில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பக் கூடிய சூழ்நிலை அங்கு நிலவுகிறது என்று தெரிவித்து வரும் ஐ.நா. தூதரக பிரதிநிதிகளும்—

இலங்கையில் நிலைமை இன்னும் மோசமாகவே உள்ளது எனவே தமிழர்களை அங்கு திருப்பி அனுப்ப முடியாது எனத் தெரிவிக்கும் பிரிட்டிஷ் கவுன்ஸில் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு தத்தமது நிலைப்பாடுகளை வலியுறுத்தி உரையாற்றினர்.

இலங்கை மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பாகவோ மேற்கு நாடுகளில் உள்ள தமிழர்களைத் தாயகம் திருப்பி அனுப்புவது பற்றியோ எந்த ஒரு முடிவும் எடுக்கப்படாமலே அந்த மாநாடு முடிவடைந்ததாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

### சாள்ஸ் அபயசேகர

இந்த மாநாட்டில் இலங்கையில் இருந்து [illegible] கொழும்பு [illegible] "பிரவ்டா" ஏட்டின் ஆசிரியரான சாள்ஸ் அபயசேகர அங்கு உரையாற்றிய போது தமிழர்கள் திருப்பி அனுப்பப்படுவதற்கு ஏற்ற சூழ்நிலை நாட்டில் நிலவவில்லை என்று கூறினார்.

யாழ்ப்பாணத்தில் இயல்புநிலை ஏற்பட்டிருப்பதுபோல் தெரிந்தாலும் இன்னமும் அங்கு குழப்பகரமான ஒரு நிலைமையே உள்ளது. இராணுவ நடவடிக்கைகளும் அங்கு தொடர்ந்து இடம் பெறுகின்றன.

இந் நிலையில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் சிபார்சு பொருத்தமானதாக இல்லை, வெளிநாடுகள் இலங்கைஅரசுக்கு நிதி உதவிகளை வழங்கும் வரை அங்கு யுத்தம் தொடரும். அதேபோன்று வெளிநாடுகளில்உள்ள தமிழர்கள் நிதி வழங்கும் வரை விடுதலைப் புலிகளும்தொடர்ந்து யுத்தத்தில் ஈடுபடுவர்—இவ்வாறு சாள்ஸ் அபயசேகர மேலும் தெரிவித்தார்.

### ஐ. நா. பிரதிநிதி

மாநாட்டில் உரையாற்றிய ஐ. நா. பிரதிநிதி கூறியதாவது:-

மேற்கு நாடுகளில் உள்ள தமிழ் அகதிகள் தாயகம் திரும்பக்கூடிய பாதுகாப்பான நிலை அங்கு நிலவுகிறது, மனித உரிமைகளை மதிப்பதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இலங்கை இராணுவம் இப்போது தொழில்சார் இராணுவமாகவே செயற்படுகிறது: விடுதலைப் புலிகளுக்கு எதிராக மட்டுமே அது போரிடுகிறது—என்றார்.

### நோர்வே எம். பி.

மாநாட்டில் உரையாற்றிய நோர்வே கிறிஸ்தவ மக்கள் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அமி நகஸஸ்—

இலங்கை நிலைவரம் தொடர்பான அகதிகளுக்கான ஐ. நா: தூதரகத்தின் அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது. அங்குள்ள நிலைமை தொடர்பாக அரசு தெரிவிக்கும் தகவல்களைவிட சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் மனித உரிமைகள் அமைப்புகள் தெரிவிக்கும் தகவல்களையே கவனத்தில் கொள்ள வேண்டும்—என்றார். (ஐ-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம் யாழ்ப்பாணம்

# வலி. மேற்குப் பகுதியில் நுளம்பு ஒழிப்பு வாரம்

அராலி ஜூன் 2

வலிகாமம் மேற்கு பிரதேசத்தில்எதிர்வரும் 9ஆம்திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரை நுளம்பு ஒழிப்பு வாரத்தை அனுஷ்டித்து நுளம்புகளை ஒழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் வலிகாமம் மேற்கு பிரதேச செயலகம், சங்கானை கோட்டக் கல்வி அலுவலகம் ஆகியன இணைந்து இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன,

இப் பகுதியில் வீடு வீடாகச் சென்று வீட்டுக் காணிகளில் நுளம்பு பெருக்கக் கூடிய இடங்களை கண்டறிந்து அவற்றை இல்லாது அழித்து நுளம்புப் பெருக்கத்தைத் தடுக்கும் பிரசார வேலைகளிலும் குறித்த காலப்பகுதியில் பொது சுகாதார திணைக்கள ஊழியர்கள், கிராம உத்தியோகத்தர்கள் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் ஈடுபடவுள்ளனர்.

கடந்த புதன்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்ற நுளம்பு ஒழிப்புவார ஆலோசனைக் கூட்டத்தில் இத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. மேற்படி கூட்டத்தில் வலிகாமம் மேற்கு பிரதேச கிராம உத்தியோகத்தர்கள் பிரதேச செயலக ஊழியர்கள், பாடசாலை அதிபர்கள், பொதுச் சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும்பொது நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

நுளம்பு ஒழிப்பு வாரம் தொடர்பாக ஒவ்வொரு பாடசாலைகளிலும் பிரசார கருத்தரங்குகளை பொது சுகாதார திணைக்கள ஊழியர்கள் நடத்தவுள்ளனர்,

(ஐ - 12)


**A/L 99 கலை, வர்த்தகம்**

**ஆரம்பம்: 02–06–97 திங்கள்**

மாலை 4. 00 மணி

எமது வழமையான ஆசிரியர் குழு

**O/L DAY CLASS**

**ஆரம்பம்: 02–06–97 திங்கள்**

காலை 9. 00 மணி

**ஐடியல் கல்வி நிலையம்**

நீர்வேலி.

(47566) - நிர்வாகி



**திரு ரியுசன் சென்ரர்**

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

**O/L பகல்நேர வகுப்புகள்**

**ஆரம்பம்: 02-06-1997**


திங்கட்கிழமை காலை 8-00 மணி

| | | |
|---|---|---|
| கணிதம் | — | திரு. மகேந்திரன் |
| விஞ்ஞானம் | — | திரு. இரா. செல்வவடிவேல் |
| தமிழ் | — | திரு. ஆர்த்திகன் |
| சமூகக்கல்வி | — | திரு. வேலா |
| ஆங்கிலம் | — | திரு. தர்மலிங்கம் |
| வர்த்தகம் | — | திரு. நாதன் |
| சமயம் | — | திரு. பிரதீஸ் |

அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும். மாதாந்தப் பரீட்சைகள் நடைபெறும். முழுப் பாடத்திட்டமும் முடிக்கப்படும்.

(47252)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்

| தோற்றம்: | | மறைவு: |
|---|---|---|
| 21 | | 04 |
| — | | — |
| 08 |  | 05 |
| — | | — |
| 1915 | | 1997 |

### அமரர் சின்னத்தம்பி நாகலிங்கம்

(முகவர்: இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம் எரிபொருள் விற்பனை நிலையம், சுன்னாகம், தெல்லிப்பழை)

அன்பின் திருவுருவாய், பாசத்தின் உறைவிடமாய், எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய்த் திகழ்ந்து, எங்களை நல்வழிகாட்டி வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் பாசத்தினை எம்மிடம் இருப்பிடமாய் அமர்த்திவிட்டு அணைந்த ஒளி விளக்கே! எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும் எம் பப்பாவின் நினைவலைகள் எங்களை விட்டகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல துர்க்காதேவியை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

நாளை 03 – 06 – 97 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஆக்லேன்,
உடுவில்.

(47561)

## மேலும் ஐந்து பஸ் வண்டிகள்

வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்கு மேலும் 5 புதிய பஸ் வண்டிகள் வந்து சேரவுள்ளன.

இவற்றில் மூன்று யாழ்ப்பாண டிப்போவுக்கும், இரண்டு பருத்தித்துறை டிப்போவுக்கும் வழங்கப்படவுள்ளது. (ஐ-173)

## தமிழ்த்தின விழா

திருநெல்வேலி, ஜூன் 2

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த தமிழ்த் தினவிழாகல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது. கல்லூரி தமிழ் மன்றம் நடத்தும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் இரா. சிவச்சந்திரன் கலந்து கொள்வார். (ஐ 135)


**விக்னா கல்வி நிறுவனம்**

52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

6ஆம், 7ஆம், 8ஆம், ஆண்டுக்கானவிஞ்ஞானம், ஆங்கிலம் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் தேவை. 2-6-97 — 6-6-97 ஆம் திகதி வரை சான்றிதழ்களுடன் நேரிலோ தபால் மூலமோ விண்ணப்பிக்கவும்.

நிர்வாகி.

(47567)



**சப்பாத்துகள்**

கொரியத் தொழில் நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட மாணவர்களுக்கான சப்பாத்துகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:

**வதனி மருந்தகம்**

பஸ் நிலைய வீதி,
சாவகச்சேரி.

(சி/844)


## வாக்காளர் இடாப்பு திருத்தும் பணி ஆரம்பம்

### தேர்தல் திணைக்களம் அறிவிப்பு

கொழும்புத்துறை, ஜூன் 2

வாக்காளர் இடாப்புக்கள் திருத்தப்பட உள்ளன. இந்த வருடத்துக்கான பதிவைத் தயாரிக்கும் வேலைகள் இவ் வாரம் ஆரம்பமாகும் என்று தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்புப் பகுதியில் விசேட அதிகாரிகள் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று பிரதித் தேர்தல் ஆணையாளர் ஏ.டி.டி.சில்வா தெரிவித்தார்.

இந்தப்பணியில் உதவுவதற்காக பிரதிநிதி ஒருவரைத் தெரிவுசெய்யுமாறு, எல்லா அரசியல் கட்சிகளும் கேட்கப்பட்டுள்ளன. இதனால் தேர்தல் இடாப்புக்களைத் திருத்தும்போது ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது சுலபமானதாக இருக்கும் என்று ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

குடியிருப்பாளர்கள் விண்ணப்பப் படிவத்தினை உரிய முறையில் நிரப்பி குறித்த காலத்தில் கிராம அதிகாரிகளிடம் சமர்ப்பிக்க வேண்டும். வாக்காளர் இடாப்பில் திருத்தங்களைச் செய்வதற்கும் வாய்ப்பளிக்கப்படும் என்றும் பிரதி ஆணையாளர் தெரிவித்தார்

(ஐ-5)

## வடமராட்சியில் தரம் குறைந்த பாண்

வடமராட்சி ஜூன் 2

வடமராட்சிப் பகுதியில் தயாரிக்கப்படும் பாண் தரம் குறைந்து காணப்படுவதாகப் பலர் முறைப்பாடு செய்துள்ளனர்.

அண்மைக்காலமாக பேக்கரிகளுக்கு தரம் குறைந்த மா விநியோகிக்கப்படுவதினால் பாண் தரம் குறைவாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

(ஐ 173)

## பாதணி உற்பத்தி மூலப் பொருள்கள்

### மாஹோரா கப்பலில் வந்தன

வடமராட்சி, ஜூன் 2

வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள பாதணி உற்பத்தியாளர்களுக்குத் தேவையான பாதணி உற்பத்திக்கான மூலப்பொருள்களை நெல்லியடி- கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வழங்கவுள்ளது.

இதற்கென மூன்று இலட்சம் ரூபாய் பெறுமதியான மூலப்பொருள்களை கொழும்பில் கொள்வனவு செய்த இச் சங்கம் அவற்றை மஹோா கப்பல் மூலம் எடுத்து வந்துள்ளது. (ஐ-173)

## பருத்தித்துறை - யாழ். பஸ்சேவை புறப்படும் நேரங்களில் மாற்றம்

வடமராட்சி, ஜூன் 2

பருத்தித்துறைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான இ. போ. ச, பஸ் சேவைகள் ஆரம்பிக்கும் நேரத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு முதலாவது பஸ் காலை 6 மணிக்கு முன்பதாகவும், யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு கடைசி பஸ் பிற்பகல் 5 மணிக்கு முன்பதாகவும் புறப்படும் விதத்தில் நேர அட்டவணை மாற்றி அமைக்கப்படவுள்ளது.

(ஐ-173)

## வாடகைக்கு சேவையில் ஈடுபடுத்த கூட்டுறவு சங்கங்கள் ஓட்டோ கொள்வனவு

வடமராட்சி, ஜூன் 2

வாடகைக்கு சேவையிலீடுபடுத்தவென வடமராட்சியிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டாக ஓட்டோ வண்டிகளைக் கொள்வனவு செய்யவுள்ளன.

உடுப்பிட்டி, நெல்லியடி— கட்டைவேலி, புலோலி ஆகிய மூன்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுமே ஓட்டோ வண்டிகளைக் கொள்வனவு செய்து தத்தம் பகுதி மக்களுக்கு அத்தியாவசிய பயண சேவைகளுக்காக வாடகைக்கு விடவுள்ளன.

அத்துடன் உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஏற்கனவே ஓர் ஓட்டோவை வாடகை சேவையில் அமர்த்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ-173)


**மாபெரும் மலிவு விற்பனை**

★ சாறிவகைகள் ரூபா 500/= மட்டுமே
★ சேட்டிங், சூட்டிங் வகைகள்
★ சீத்தைகள், பிளவுஸ் துணிகள்
★ றெடிமேட் ஆடை வகைகள்
★ மற்றும் அனைத்து ஜவுளி வகைகள்

மலிவு விலையில் விற்பனையாகிறது

இன்றே நாடுங்கள்:

**ராகுலசூரியான்ஸ் புடைவையகம்**

122, 329 பிரதான வீதி,
பருத்தித்துறை.

(சி/847)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

**தவறிவிட்டது**

திருமதி மரியாசரோஜினி மனோகரன் (ஆசிரியை)ஆகிய எனது 517232690V இலக்க தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, உத்தியோக அட்டை, Army Pass அனைத்தும் சொலமன் லேனுக்கும், சின்னக்கடைக் கடைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மனிதாபிமான அடிப்படையில், யாழ் சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலையில் ஒப்படைக்கவும். [47565]

**நாடகம் எழுதுவது எப்படி?**

வீரகேசரியில் 'யாழ்ப்பாணத்தில் அந்த ஆறுமாதங்கள்' கட்டுரையை எழுதுகின்ற அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் நாவல் 'அக்கரைச் சீமையில்' ரூபா 25, நாடகம் எழுதுவது எப்படி? நூல் ரூபா 50. [47544]

**மணமகன் / மணமகள்தேவை**

K. பகவதி திருமுகன் திருமண சேவை கைதடி தெற்கு, கைதடி (முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம் அண்மையில்) சகல மணமக்களுக்கும், உரிய ஆவணங்களுடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும். [47560]

## வினோத் கல்வி நிலையம்

5ஆம், குறுக்குத்தெரு,

**O/L DAY CLASS**

ஆரம்பம்: 2-6-97

திங். (மு. ப. - 9 மணி)

நிர்வாகி

(47569)

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆலய நிர்வாக சபை உறுப்பினராக பல வருடங்களாகயிருந்து, பல ஆலயப் பணிகளை ஆற்றி அமரத்துவம் எய்திய

**அப்பையா சண்முகநாதன்**

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபை,
கொக்குவில் கிழக்கு கோணாவளை
வைரவர் கோயில் (47564)

THE EXPRESS INSTITUTE KOPAY — A BOON TO STUDENTS

## இன்று (2 – 6 – 1997) ஆரம்பம்

**O/L DAY CLASS**

(காலை 8 00 - 1.00 வரை)

யாழ். நகரின் இணையற்ற ஆசான்களின் ஒருங்கிணைந்த சேவை

(47563)

## யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### ஒன்று கூடலும், மதிய போசனவிருந்தும்

இடம்: அருணாசலம் மண்டபம்
காலம்: 22-6-1997 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 10 மணி

குறிப்பு: அங்கத்தவர் தமது அங்கத்துவத்தையும் வரவையும் 15 – 6 – 97 இக்கு முன் உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தொடர்பு: செயலர்

அலுவலகர்,
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(சி/835)

# A/L 97, 98

★ தூய கணிதம்
★ பிரயோக கணிதம்

பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் பற்றிய விரிவுரைகள்

ஆரம்பம்:- 04-06-97 பி. ப. 3 மணி
இடம்:- 106 B, கோயில் வீதி, கைலாச பிள்ளையார் கோயிலடி, நல்லூர்.

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

(47551) பொ. இராஜகோபால்.

## JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY VADDUKODDAI.

முழுநேரப் பயிற்சி நெறிகள் 16 - 06 - 1997 அன்று ஆரம்பமாகவுள்ளன.

தொழில்நுட்ப பயிற்சி நெறிகள் (தமிழ்மூலம்)

1. Radio, T. V. Servicing - 1 Year
2. Automobile TechnologY - 1 year

G. C. E. (O/L) 5 Subjacts

(a) Water pump / Generator Repairing - 6 Months
(நீர் இயந்திரம் / மின்பிறப்பாக்கி திருத்துதல் பராமரிப்பு)

(b) Motor Cycle repairing - 6 Months

3. Electrical Wiring & Installation practice - 1 Year
(மின் இணைப்பும் நிர்மாணமும்)

4. Welding Practice
(உலோக ஓட்டு வேலைப்பயிற்சி)

கல்வித் தகைமை: க. பொ. த. (சா/த) வரை படித்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவம்

★ ரூபா 10-00 செலுத்தி யாழ்ப்பாணக்கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

★ நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணக்கல்லூரியில் 10 - 06 - 97 காலை 10-00 மணிக்கு நடைபெறும்.

★ பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்துடனும் கல்விச் சான்றிதழ்களுடனும் சமுகமளிக்கவும்

இயக்குநர்.

(சி-846)

# முக்கிய அறிவித்தல்

பல்லாண்டு காலமாக மக்களின் நல் ஆதரவையும் அபிமானத்தையும் பெற்றுக் கொண்ட எமது தயாரிப்பான

**க.மு. ஸ்ரீமார்க் மண்டான்**

சுருட்டுக்களையே கேட்டு வாங்கி உபயோகியுங்கள். எமது பெயரில் தரம் குறைவான போலி சுருட்டுக்கள் உலாவுகின்றபடியால் சுருட்டு வாங்கும் போது காரம், மணம், குணம் நிறைந்த க.மு ஸ்ரீமார்க் மண்டான் சுருட்டுக்களையே கேட்டுவாங்கி உபயோகியுங்கள்.

பருத்தித்துறை ஏக விநியோகஸ்தர்:- **ரட்ணம் வெற்றிலைக்கடை**
(கனகரத்தினம்) மக்கள்சந்தை, பருத்தித்துறை

கீழ்க்காணும் எமது விற்பனைப் பிரதிநிதிகளிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

### பருத்தித்துறை

புலோலி (M.P.C.S.) புலோலி அதன் கிளைகளிலும்

மெயின் வீதி:
வேலவன் ஸ்ரோஸ்
விக்னேஸ்வரா ஸ்ரோஸ்
நாதன் ஸ்ரோஸ்
ரதி ஸ்ரோஸ்
சிறிஸ் கபே

மார்க்கெற்:
அம்பாள் ஸ்ரோஸ்
NEW குமாரி ஸ்ரோஸ்
ராஜா ஸ்ரோஸ்
கிஷ்ணன் ஸ்ரோஸ் (குமார்)
குட்டிகடை (S.V.R.)
ஆனந்தன்வெற்றிலைக் கடை

சிவபாதம் (செல்வராசா) மீன்மார்க்கெற்
சிவாறேடிங் சென்ரர் (பஸ்நிலையம்)
சுவாமிநாதன் (தும்பளை)
உதயசிறி ஏஜென்சி (தும்பளை)
ஒரபுகடை (கற்கோவளம்)
V. துரைசிங்கம் (கற்கோவளம்)
புவிதரன் கிறிஸ்ரல் றேடிங் (புலோலி தெற்கு)
மார்க்கண்டு (புற்றளை)
சுப்பிரமணியம் பருத்தித்துறை வீதி (மந்திகை)
கணேஸ் ஸ்ரோஸ் (மந்திகை)
அம்பாள் கபே (மந்திகை)
கணபதிப்பிள்ளை களஞ்சியம் (பஸ்நிலையம் பளை)
சிவம் ஸ்ரோஸ் (நாகர் கோயில்)
தில்லைநாதன் (நாகர்கோயில்)

### நெல்லியடி

திருமகள் ஸ்ரோஸ்
ஜமுனா ஸ்ரோஸ்
பிள்ளையார் ஸ்ரோஸ்
ஆனந்தா ஸ்ரோஸ்
சர்வானந்தா ஸ்ரோஸ்
புதிய அம்பிகா ஸ்ரோஸ்
ஜெகா ஸ்ரோஸ்
ஸ்ரீ ஐங்கரன் ஸ்ரோஸ்
திசா ஸ்ரோஸ்

மார்க்கெற்:
கிருஸ்ணானந்தம் ஸ்ரோஸ்
சிங்கம்ஸ் ஸ்ரோஸ்
நாதன் ஸ்ரோஸ்
விநாயகர் ஸ்ரோஸ்
உதயன் ஸ்ரோஸ்
கரன் ஸ்ரோஸ்
அபிராமி ஸ்ரோஸ்

உடுப்பிட்டி (M.P.C.S) உடுப்பிட்டி கிளைகளும்
மாரியப்பன் ஸ்ரோஸ்
T. M. ஸ்ரோஸ் (மார்க்கெற்)
நடராசா (மார்க்கெட்)
சாயி கிஸ்ஷண (புளியடி)
சிவலிங்கம் ஸ்ரோஸ் (வியாபாரிமூலை)
ரட்ணம்ஸ் ஸ்ரோஸ் திக்கம் மார்க்கெற்
செல்வம் (திக்கம் மார்க்கெற்)
அழகுகடை (நாகர்கோயில்)
ஏரம்பல் (அம்பன் ஆஸ்பத்திரிக்கு முன்)

**க. மு. மண்டான் சுருட்டு நிர்வாகம்**
கரணவாய் தெற்கு, கரவெட்டி

(47562)

## 31 ஆவது நாள் நினைவஞ்சலி அழைப்பு



மண்ணில்: 30 — 01 — 1933

மகிமைக்குள்: 04 — 05 — 1997

கர்த்தருக்குள் நித்திரையடைந்த
**திருமதி லில்லி தவமணி நல்லதம்பி**

03-06-1997 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும், 04 - 06 - 97 புதன்கிழமை பி. ப. 3.30 மணிக்கு அல்வாய் மெதடிஸ்த தேவாலயத்தில் நடைபெறும் நினைவு நாள் ஆராதனையிலும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

J. S. நல்லதம்பி (கணவன்),
பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள்.

அல்வாய் தெற்கு,
அல்வாய். (47530)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# உதயன்

## வழி பிறக்குமா?

குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த பின்னர் தமது உறவுகளைத் தேடித்திரிவோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகிறது. பெற்றோர்கள், மனைவிமார், சகோதரர், சகோதரிகள் என்று ஐநூறுக்கும் மேற்பட்டவர்கள் தமது உறவுகளை பல மாதங்களாகப் பார்க்க முடியாமல் கண்ணீரும் கம்பலையுமாகத் தவிக்கிறார்கள். அன்ன ஆகாரமின்றி, நேராத நேர்த்தி எல்லாம் வைத்து, அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என்பதனை உறுதி செய்ய நாளுக்கு நாள் படி மாறிப் படி ஏறுகிறார்கள்.

அரசாங்க அதிபரைச் சந்திக்கிறார்கள்; அவரின் பிரதிநிதியைச் சந்திக்கிறார்கள்; கொழும்பில் உள்ள ஜனாதிபதி மற்றும் அரச, அரசியல் பிரமுகர்களுக்குப் பக்கம் பக்கமாக மகஜர்களை அனுப்புகிறார்கள்.

ஆனால் கைது செய்யப்பட்டுக் காணாமற் போனதாகக் கூறப்படும் இளைஞர்கள், யுவதிகள், இளம் குடும்பஸ்தர்களுடன் கடித மூலம் தொடர்பு கொண்டாவது தமது பிரிவுத்துயரைக் கடுகளவேனும் குறைக்க முடியாமல் உளம் வாடுகிறார்கள் பாதிக்கப்பட்டவர்கள்.

காணாமற் போனோர் கைதானோரின் பாதுகாவலர் சங்கம் என்றும் அன்னையர் முன்னணி என்றும் அமைப்புகளைத் தொடங்கி நாளாந்தம் கூடி கலந்தாலோசித்துத் தமக்குத் தெரிந்த வழிகள் மூலம் எல்லாம் தமது குடும்ப உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்வதற்கு முயற்சிக்கிறார்கள். எதுவுமே சாதகமாகவோ, ஆக்கபூர்வமாகவோ ஆகவில்லை.

யாழ். மாவட்டத்தில் காணாமற் போனோர் குறித்து விசாரணை நடத்தி வரும் பாதுகாப்பு அமைச்சுக் குழு மூன்றாவது நடவையாக இந்த வாரத்தில் இங்கு வரவிருக்கிறது. அந்தக் குழு தனது விசாரணையை முடித்துக் கொண்டு பாதுகாப்புப் பிரதி அமைச்சருக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்.

அதன் பின்னர் தான் இது விடயத்தில் மேற்கொண்டு ஏதாவது செய்யலாம் — நடவடிக்கை எடுக்கலாம் — என்று பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தை தெரிவித்திருக்கிறார்.

விசாரணைக்குழு விசாரித்து, அறிக்கை சமர்ப்பித்து அதன் பின்னர் நடவடிக்கை என்றால் இன்னும் மூன்று மாதங்களாவது செல்லாதா?

விசாரணைக் குழு காணாமற்போனவர்களில் குறிப்பிட்ட ஓர் எண்ணிக்கையினர் நிலை சம்பந்தமாகவே விசாரிக்கிறது. மிகுதிப் பேரின் நிலை குறித்து எப்படி அறிவது?

கைதானோர், காணாமற் போனோர் எங்கிருக்கிறார்கள்? என்ன ஆனார்கள்? — என்று அறிவதற்கே இவ்வாறு மாதங்கள் பல செல்லுமாயின், அவர்கள் எப்போது விடுவிக்கப்படுவார்கள் என்பது சொல்லக் கூடியதன்று.

பிள்ளை தனது பெற்றோருடனும், கணவன் தனது மனைவியுடனும் ஒன்றாக வாழ்வது மனித உறவுகளில் மிக அடிப்படையானது; அடித்தளமானது. மனித வாழ்வின் அடிப்படை உரிமை இதுவாகும்.

மேலும் இது ஒரு மனிதாபிமான விவகாரம். தாய் ஒருவர் ஆட்சித் தலைவராக உள்ள ஒரு நாட்டில் மனித உறவுகளை துச்சமாக்குவது வெட்கத்துக்கு உரியது.

# யுத்த நிறுத்தம் செய்யுமாறு கோருகிறது தமிழர் கூட்டணி

### ஜனாதிபதியிடம் நேரில் வேண்டுகோள்

மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களில் இருந்து அவர்கள் ஓரளவேனும் விடுபட வேண்டுமாயின், அதற்குயுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஜனாதிபதியிடம் தெரிவித்தோம்.

எமது இந்தக் கோரிக்கையைத் தாம் பரிசீலிப்பதாக அவர் எமக்கு உறுதி அளித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பியான ஜோசப் பரராஜசிங்கம் மேற்கண்டவாறு தகவல் வெளியிட்டார்.

கடந்த வியாழக்கிழமை மாலை ஜனாதிபதியை கூட்டணித் தூதுக்குழு சந்தித்தது குறித்துக் கேட்டபோதே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

''யுத்த நிறுத்தம் செய்ய நாம் தயார்; ஆனால் அதை விடுதலைப் புலிகள் கௌரவிக்க வேண்டுமே'' — என்று ஜனாதிபதி தங்களிடம் தெரிவித்தார் எனவும் ஜோசப் பரராஜசிங்கம் மேலும் குறிப்பிட்டார். (உ-3-150)

# ஐ.தே.க. - தமிழ், முஸ்லிம் கட்சிகள் பேச்சில் பீரிஸூம் பங்குபற்றுவார்

கொழும்பு, ஜூன் 2

அரசு முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளில் முக்கிய விடயங்கள் குறித்து தமிழ் - முஸ்லிம் கட்சித் தலைவர்களுக்கும், ஐ. தே. க தலைவர்களுக்கும் இடையில் எதிர்வரும் வியாழக்கிழமை முக்கிய பேச்சுக்கள் இடம்பெறவுள்ளன.

இப்பேச்சுக்களில் நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸூம் கலந்து கொண்டு முஸ்லிம்களுக்கு தனிமாநிலம், வடக்கு — கிழக்கு இணைப்பு ஆகிய விடயங்கள் தொடர்பான அரசின் நிலைப்பாடு குறித்து விளக்கமளிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றக் கட்டடத்தில் இடம்பெறும் இந்தப் பேச்சுக்களில் ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பியான நீலன் திருச்செல்வம், புளொட் அமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப், இ. தொ. கா. தலைவர் எஸ்.தொண்டமான் ஆகியோர் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐ. தே. க சார்பில் எம். எச். மொஹமட், றொனி டி மெல், சொக்ஸி, மஹிந்த சமரசிங்க, டிரோன் பெர்னாண்டோ ஆகியோர் பங்குபற்றுவர்.

அதிகாரப்பரவலாக்கல் குறித்து ஆராய்ந்து வரும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவும் அன்றைய தினம் கூடவிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-150-3)

# ஸ்ரீமானி போக்கு: அரசுக்குள் எதிர்ப்பு

கொழும்பு, ஜூன் 2

போக்குவரத்து, மகளிர் விவகார அமைச்சர் ஸ்ரீமானி அத்துலத்முதலியை அமைச்சர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பங்குபற்றிய அமைச்சர் ஸி. வி. குணரத்தினா, ஸ்ரீமானியை அமைச்சரவையில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்று கோரினார்.

''இந்த விவாதத்தில் 'மன்னியுங்கள்; மறந்து விடுங்கள்' என்ற கிறிஸ்தவ கோட்பாட்டின்படி நடப்பதே சிறந்தது'' — என்று ஜனாதிபதி அவருக்கு பதிலளித்தார்.

''இந்த விடயத்தில் சமயத்தைக் கொண்டு வர வேண்டாம்'' — என்றார் அமைச்சர் ஸி. வி. குணரத்தினா.

''நான் ரீஸீயஸாகத்தான் பேசுகின்றேன்'' — என்று கூறி விடயத்தை அத்துடன் கத்தரித்துக்கொண்டார் ஜனாதிபதி.

''வேண்டுமானால் உள்ளூராட்சித் தேர்தல்களில் ஏன் பங்குபற்றவில்லை என்று கேட்டு ஸ்ரீமானிக்கு இன்னும் ஒரு கடிதத்தை எழுதுவோம். அதன் பின் இது பற்றிக் கதைப்போம்'' — என்றும் இறுதியாக ஜனாதிபதி கூறினார்.

இதற்கிடையில் —

அரசாங்கத்தில் இருந்து அமைச்சர் ஸ்ரீமானி அத்துலத்முதலியை வெளியேற்ற வேண்டும் என்று கோரும் சுவரொட்டிகள் கொழும்பில் பல இடங்களில் ஒட்டப்பட்டிருந்தன.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஒரு குழுவினரே இச்சுவரொட்டிகளை ஒட்டி இருக்கலாம் எனக் கொழும்பில் பேசப்பட்டது. (உ-3 -150)

### குண்டு வெடிப்பில் கப்பல் சேதம்:

# வாக்குமூலமளிக்க கப்டன் மறுப்பு!

திருகோணமலை, ஜூன் 2

திருமலை துறைமுகப் பகுதிக்கு வெளியே கடந்த வியாழனன்று அதிகாலை குண்டு வெடிப்பால் சேதமடைந்த கிரேக்க நாட்டுக் கப்பலின் கப்டன் அச் சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் அளிக்க மறுத்துள்ளார்.

லண்டனில் இருந்து அந்தக் கப்பல் கம்பனியின் பிரதிநிதியும் சட்டத்தரணி ஒருவரும் வரவுள்ளதாகவும் —

அவர்கள் நேரில் வந்து சேர்ந்த பின்னரே தம்மால் வாக்குமூலம் அளிக்க முடியும் என்றும் —

அவர் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை —

கப்பல் சேதமடைந்த சம்பவம் ஓர் உள்வீட்டுச் சதி என்றும் —

மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்த அக்கப்பலுக்கு காப்புறுதி நஷ்டஈட்டைப் பெறுவதற்காக முன் கூட்டியே திட்டமிடப்பட்ட செயலாக அது இருக்கலாம் என்றும் —

திருமலை துறைமுக வட்டாரங்களில் பேசப்படுகிறது.

## நாளை

**வைகாசி 20**

செவ்வாய்க்கிழமை

திதி: திரியோதசி

பிற்பகல் 2.53 வரை;

நட்சத்திரம்: பரணி

மாலை 5.50 வரை;

கார்த்திகை விரதம்

சுபநேரம்: 10.22-11.52

ராகுகாலம்: 2.52-4.22

பகலுக்கும் இரவுக்கும்

(பஞ்சாங்க நேரப்படி)

## படைக்கு ஆள் சேர்ப்பு

கொழும்பு, ஜூன் 2

இராணுவத்துக்கு ஆள்களைச் சேர்க்கும் நேர்முகப் பரீட்சைகள் இன்று தொடக்கம் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை தென்னிலங்கையில் பல்வேறு நிலையங்களில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## ஐரோப்பிய அமைப்பு பிரதிநிதி வருகை

ஐரோப்பிய நாடுகளின் அமைப்புப் பிரதிநிதி ஒருவர் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

நேற்று முன்தினம் நண்பகல் பலாலிக்கு வந்து சேர்ந்த இவரை, யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் அழைத்துச் சென்று வலி. வடக்கில் மீளக் குடியமர்த்தப்படவிருக்கும் பகுதிகளைக் காட்டினார்.

அளவெட்டி, தெல்லிப்பழை பகுதிகளுக்குச் சென்ற அவர் அங்கு நடைபெறும் வேலைகளைப் பார்வையிட்டார்.

இன்று அவர் யாழ் செயலகத்துக்கு வந்து அதிகாரிகளுடன் கலந்துரையாடுவார்.

# சிங்களவருக்கு என தனிக்கட்சி உதயம்

சிங்களவர்களுக்கென்று தனிக்கட்சி ஒன்று கடந்த 29 ஆம் திகதி கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு என்று தனிக்கட்சிகள் பல இருப்பது போல், சிங்கள மக்களுக்கென்று இக்கட்சி உருவாக்கப்படுவதாக அக்கட்சி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

இக்கட்சியின் தலைவராக முன்னாள் நீதியரசர் ராஜா வனசுந்தர நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்களான எஸ். எல். குணசேகர, மேர்வின் டி சில்வா ஆகியோர் இக்கட்சியை அமைப்பதில் முன்னின்று உழைக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-150-3)

# 'சமுத்திர தாரகை' கடத்தப்பட்டது!

யாழ்ப்பாணம், ஜூன் 2

நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டிருந்த 'சமுத்திர தாரகை' படகு கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு இனந் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டது.

அவ்வேளை படகுக்குக் காவலாக கடமையில் இருந்த காவலாளி கடத்தற்காரர்களின் தாக்குதலுக்கு இலக்காகி பலியானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

படகைக் கடத்தியோர் அதனை இந்தியாவுக்குக் கொண்டு சென்றிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான இந்தப் படகு அண்மையில்தான் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

மேற்படி கடற் பாதையில் சேவையில் ஈடுபட்டிருந்த தனியார் படகு ஒன்றும் இதேபோல் முன்னர் கடத்திச் செல்லப்பட்டிருந்தது தெரிந்ததே.

'சமுத்திர தாரகை' கடத்தப்பட்டதை அடுத்து நெடுந்தீவுக்கான போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து நெடுந்தீவுக்குச் செல்வதற்காக குறிகாட்டுவான் துறைக்கு வந்த பெரும் எண்ணிக்கையான பயணிகள், படகுச் சேவை இல்லாததால் மீண்டும் யாழ்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# பண்டா குடும்ப உறவை பேண நடந்த நிகழ்ச்சி

### சந்திரிகா -- அனுரா சந்திப்பு

கொழும்பு, ஜூன் 2

பண்டாரநாயக்க குடும்பத்தில் நிலவும் பிளவை நீக்கும் வகையில் அலரி மாளிகையில் இந்தியக் குழு ஒன்றின் நடன நிகழ்ச்சி கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் மூத்த மகள் சுனேத்திராவின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் சிறிமாவோ, அனுரா பண்டாரநாயக்க உட்பட ரத்வத்தை குடும்பத்தினரும் பங்கு பற்றினார்கள்.

ஜனாதிபதி சந்திரிகாவின் பிள்ளைகள் இருவருடனும் அனுரா நெடுநேரமாக பேசிக் கொண்டிருந்தார் என்றும் —

தனது சகோதரியும் ஜனாதிபதியுமான சந்திரிகாவுடனும் அவர் பேசியதாகவும் —

கொழும்பு செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

குடும்பத்துக்குள் நிலவும் பிளவை நீக்கும் வகையில் பிரதமர் சிறிமாவோவின் விருப்பப்படியே இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-150-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் சேவையில் இருந்து தப்பி ஓடினாலும் தண்டனை!

## புதிய சட்டம கொணடுவருவது குறித்து ஆலோசனை

கொழும்பு, ஜூன் 2

பொலிஸ் சேவையில் இருந்து தப்பி ஓடுபவர்களைத் தண்டிக்க வகை செய்யும் விதத்தில் சட்டத்திருத்தம் கொண்டுவர ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

முப்படைகளில் உள்ளவர்கள் தப்பி ஓடினால் அவர்களைக் கைது செய்து படை நீதிமன்றம் முன்பாக நிறுத்தித் தண்டிக்க சட்டம் உள்ளது.

பொலிஸ் சேவையில் இருந்து தப்பி ஓடுபவர்களை கைது செய்து, தண்டிக்க சட்டத்தில் தற்போது போதிய ஏற்பாடுகள் இல்லை.

அத்தகையோர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டாலும் 'கோழைத்தனம்' என்ற குற்றச்சாட்டில் 500 ரூபா அபராதத்துடன் விடுவிக்கப்படலாம்.

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் அவர்களைத் தடுத்து வைத்தால், அவர்கள் மனித உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்து வெளியே வரமுடியும்.

இந்நிலையில் இத்தகையோரைத் தண்டிக்கத்தக்க விதத்தில் அவசர கால விதிகளின் கீழ் சட்டத்திருத்தம் கொண்டு வருவது குறித்து சட்டமா அதிபரிடம் ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சுடன் பொலிஸ் பிரிவை இணைக்கவும் ஆலோசனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3-150)

### அமெ. தூதரக அதிகாரிகள்

## ஆட்லறி வேகத்தில் தளபதியிடம் கேள்வி!

கொழும்பு, ஜூன் 2

வன்னியில் இடம்பெறும் மோதல்களின் போது ஏவப்படும் ஆட்லறிகளின் வேகத்தை விட மிக வேகமான முறையில் இராணுவத் தளபதியிடம் அமெரிக்க தூதரக அதிகாரிகள் கேள்விக்கணைகளைத் தொடுத்தனர் என்று 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார இதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

கொழும்பில் உள்ள அமெரிக்க தூதுவர் அலுவலக 2 ஆம் நிலை அதிகாரியாக இருந்த ஜோன் வோட் இடமாற்றம் பெற்றுச் செல்வதையொட்டி இரவு விருந்து ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த விருந்தில் இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோஹான் தலுவத்தவும் கலந்து கொண்டார்.

அங்கு அவரிடம் சரமாரியான கேள்விக்கணைகள் தொடுக்கப்பட்டன. என்ன விதமான கேள்விகள் கேட்கப்பட்டன என்ற விவரம் வெளியாகவில்லை.

வன்னியில் ஏவப்படும் ஆட்லறிகளின் வேகத்தை விட வேகமாக கேள்விகள் எழுப்பப்பட்டன என்று அப்பத்திரிகை வர்ணித்தது. (உ-150-3)

### வேலைநிறுத்தம் செய்யக் கோரி

## 'நோட்டீஸ்' அனுப்பிய பொலிஸ் குழு கைது!

கொழும்பு, ஜூன் 2

பொலிஸாரை நேற்றுமுதல் வேலை நிறுத்தத்தில் இறங்குமாறு கோரித் துண்டுப் பிரசுரம் வெளியிட்டதாகக் கூறப்படும் குழுவைச் சேர்ந்த பொலிஸாரைக் கைது செய்துள்ளதாகப் பதில் பொலிஸ் மா அதிபர் தர்மதாஸ சில்வா தெரிவித்தார்.

பதின்மூன்று கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முதல் வேலை நிறுத்தத்தில் குதிக்குமாறு பொலிஸாரைக் கோரி 'பொலிஸ் பொட்டோ' என்ற அமைப்பு துண்டுப் பிரசுரம் ஒன்றைச் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பியிருந்தது தெரிந்ததே.

இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் இதன் பின்னணியில் இருந்த குழு ஒன்றைக் கைது செய்துள்ளதாகவும் —

இவர்கள் அனைவரும் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர் என்றும் —

பதில் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். (உ-150-3)

### சமுத்திர...

(ஏழாம் பக்கத் தொடர்)

நகர் திரும்ப வேண்டி ஏற்பட்டது. நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு என எடுத்துச் செல்லப்பட்ட பொருள்களும் நெடுந்தீவுக்குக் கொண்டு செல்ல முடியாத நிலையில் குறிகாட்டுவான் துறைமுகத்தில் வைக்கப்பட்டிருந்தது.

நெடுந்தீவுக்கான அரசுப் படகுச் சேவை ஏற்கனவே செயலிழந்து விட்டது தெரிந்ததே. அதன் பின்னர் தனியாரின் படகு ஒன்றும், சமுத்திர தாரகையும சேவையில் ஈடுபட்டு வந்தன. ஆனால் தனியார் படகு பழுதடைந்ததை அடுத்து கடந்த வெள்ளிக்கிழமை வரை 'சமுத்திர தாரகை' மட்டுமே தனியாக சேவையில் ஈடுபட்டது.

இப்போது அதுவும் பழுதாகிப் போயுள்ளதால் நெடுந்தீவுப் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டிருக்கின்றது. (உ-111)

### பொலிஸாருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆசிரியர்கள் இன்றிப் பல பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாலும் —

பொலிஸார் மற்றும் ஊர்காவல் படையினரை ஆசிரியர்களாக நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார், ஊர்காவல் படையினர் பகலில் ஆசிரியர் வேலையையும், இரவில் பாதுகாப்பு நடவடிக்கையையும் மேற்கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-21-3)


# எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக்கல்லூரி அருகில்)

411/1, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## O/L DAY CLASS

| | | |
|---|---|---|
| கணிதம் | — | திரு. B. P. பாஸ்கரன் |
| விஞ்ஞானம் | — | திரு. இரா. செல்வவடிவேல் |
| வரலாறும் சமூகக்கல்வியும் | — | திரு. இரா. கணேஷ் |
| தமிழ் | — | திரு. T. ஆர்த்தீகன் |
| ஆங்கிலம் | — | திரு. T. சகாதேவன் |
| வர்த்தகம் | — | திரு. T. அரவிந்தன் |
| சமயம் | — | திரு. K. இராசலிங்கம் |

★ கணிதம் மேலதிக வகுப்பு மூலம் அடிப்படையில் இருந்து பாடத்திட்டம் பூர்த்தியாக்கப்படும்.

★ கணிதம் கடந்தகால 27 வினாத்தாள்களின் பகுதி I, பகுதி II வினாக்கள் அலகு ரீதியாக மீட்கப்படும்.

ஆரம்பம்: 04-06-1997 புதன்கிழமை காலை 8-00 மணி

(47549)


### சடலத்தை...

(முதலாம் பக்கத் தொடர்)

கின்றது.

சந்தி வெளிப்பகுதியில் நேற்று முன்தினம் சிங்களவர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் தேடுதல் நடத்திய இராணுவத்தினர் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் என நம்பப்படும் ஒருவரைச் சுட்டுக் கொன்றதாகக் கூறப்படுகின்றது.

அச்சடலத்தை படையினர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கையளித்து விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்குமாறு கேட்டிருந்தனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு இந்தச் சடலத்தை புலிகளிடம் ஒப்படைப்பதற்காக இலுப்படிச் சேனைக்கு எடுத்துச் சென்றனர்.

அது தமது இயக்க உறுப்பினரின் சடலம் இல்லை என்று கூறி அச்சடலத்தை ஏற்க விடுதலைப்புலிகள் மறுத்து விட்டனர் என்று கூறப்படுகின்றதாம்.

இச்சடலம் தற்போது அடையாளம் காணப்படுவதற்காக ஏறாவூர் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (உ-21-3)

### வடக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்)

படை ஆகியன தமக்கு ஒதுக்கப்பட்ட வலயத்தின் பிரதேசப் பாதுகாப்பை பலப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளன.

ஆனால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட வலயப் பிரதேசத்தில் மூன்றில் ஒருபகுதியே பலப்படுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய பிரதேசத்தைப் பலப்படுத்த அவசர நடவடிக்கை எடுக்குமாறு இராணுவ தளபதிகள் பொலிஸாரைக் கேட்டுள்ளனர்.

பாதுகாப்பைப் பலப்படுத்துவதில் ஏற்படும் காலவிரயத்தால் இராணுவ நடவடிக்கை தாமதமாவதாகவும் —

அந்தக் காலதாமதத்தைப் பயன்படுத்தி புலிகள் தமது நிலைகளைப் பலப்படுத்திக் கொள்வதில் ஈடுபடுவதாகவும் —

வீணான ஆட்லறி தாக்குதல்களுக்கு துருப்புகள் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் —

இராணுவ உயர் நிலை வட்டாரங்கள் கவலை வெளியிட்டன. (உ-150-3)

### ஆயுதக் கொள்வனவு:

## மோசடியைத் தவிர்க்க புதிய நடை முறைகள்

ஆயுதக் கொள்வனவில் இடம் பெறுவதாகக் கூறப்படும் மோசடிகளைத் தவிர்ப்பதற்காக ஜனாதிபதி புதிய நடைமுறை ஒன்றை அறிவித்துள்ளார்.

இந்த நடைமுறை குறித்து ஜனாதிபதியின் உத்தரவுப் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சந்திரானந்த டி. சில்வா முப்படைத் தளபதிகளுக்கும், பொலிஸ் மா அதிபருக்கும் சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

புதிய நடைமுறைப்படி ஆயுதக் கொள்வனவுக்கான கேள்விப்பத்திரம் கோர முன்னர் கேள்விப்பத்திர சபையில் அங்கம் வகிப்போரின் விவரங்கள் ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும். (உ-150-3)

## பன்னிருவர் விசாரணையில்!

யாழ்ப்பாணம், ஜூன் 2

களவு, கசிப்பு உற்பத்தி, விபசாரம் ஆகிய குற்றச் செயல்கள் தொடர்பாக ஒரு பெண் உட்பட 12 பேர் நேற்று ஈ. பி. டி. பி. அமைப்பால் விசாரிக்கப்பட்டனர்.

வாக்கு மூலம் பெற்ற பின்னர் விடுவிக்கப்பட்ட இவர்கள் இனிமேல் இவ்வகையான குற்றங்களில் ஈடுபட்டால் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர் என எச்சரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## விடுதலையான நால்வர்

யாழ்ப்பாணம், ஜூன் 2

குடாநாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டு கடந்த 29 ஆம் திகதி அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பின்னர் ஈ. பி. டி. பி. அமைப்பினரால் பிணையில் எடுக்கப்பட்ட நால்வர் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்கள்.

திருமலையில் உள்ள ஈ. பி. டி. பி அலுவலகத்தில் வைத்து பராமரிக்கப்பட்ட பின்னர் கப்பல் மூலம் அழைத்து வரப்படும் இவர்களை யாழ்ப்பாணத்தில் வைத்து பொறுப்பேற்குமாறு ஈ. பி. டி. பி. அமைப்பு கேட்டுள்ளது.

நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறையைச் சேர்ந்தவர்களான நடராசா ஆனந்தன், குணரத்தினம் கனிராஜ், யேசுதாஸ் ஜெகன் மற்றும் நவாலி வடக்கைச் சேர்ந்த சிவலிங்கம் உதயகுமார் ஆகியோரே விடுவிக்கப்பட்ட அந்த நால்வரும் ஆவர். (உ-3)

### ஆயுதக்கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்)

தெரிவித்தன.

தமக்கு ஆயுதங்கள் கப்பல் மூலம் வந்து சேரும் நேரங்களில், படை முகாம்கள் மீது தாக்குதல் நடத்திப் படையினரின் கவனத்தைத் திசை திருப்பிக்கொண்டு பவுத்திரமாக ஆயுதங்களை இறக்கும் யுக்தியைக் கடந்த காலங்களில் புலிகள் கடைப்பிடித்திருக்கிறார்கள் என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கைக்கு முன்னர் புலிகள் திரட்டிய மூவாயிரம் பேருக்கும் தற்போதைய கப்பலில் வந்துசேரும் என எதிர்பார்க்கப்படும் ஆயுதங்கள் வழங்கப்படும் என்றும் மேலும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-150-3)

### மன்னாரிலிரு...

(முதலாம் பக்கத் தொடர்)

யாழ்ப்பாணம் அனுப்ப அரசிடம் அனுமதி பெற்றுள்ளதாகவும் அவர் சொன்னார்.

செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில் உயிலங்குளம் ஊடாக மன்னார் நகருக்குள் மக்கள் வருவதற்கு இராணுவத்தினர் அனுமதித்திருப்பதால் அதனைப் பயன்படுத்தி பெரும் எண்ணிக்கையானோர் மன்னார் வந்து சேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களைத் தங்க வைக்க காட்டு ஆஸ்பத்திரி, பேசாலை அகதிமுகாம், உயிலங்குளம் ஜீவோதயம் ஆகிய இடங்களில் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. (உ-21-3)

## ஜெயலலிதா ஆதரவு

சென்னை, ஜூன் 2

எதிர்வரும் வெள்ளிக்கிழமை தமிழகத்தில் ஈழத் தமிழருக்கு ஆதரவாக நடைபெறவிருக்கும் ஹர்த்தாலுக்கு தமது கட்சி முழு ஆதரவு வழங்கும் என்று அ. அ. தி. மு. க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

அனைத்துக்கட்சிகள் ஏற்பாடு செய்துள்ள இந்தக் ஹர்த்தாலில் பங்குபற்றுவது குறித்து ஆளும் தி.மு.க. இன்னமும் முடிவு செய்யவில்லை.

அதேவேளை — அன்றைய தினத்தை பொது விடுமுறையாக அறிவிக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி கோரியுள்ளது. (உ-3-5)

## நூல்கள் அன்பளிப்பு

சாவகச்சேரி மகளிர் கல்லூரி நூல் நிலையத்திற்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன், கொழும்பு ஏசியா பவுண்டேசன் ஆகியவற்றாலும் கல்லூரி நலன் விரும்பிகளாலும் வழங்கப்பட்டுள்ளன.

### பிரிட்டிஷ்...

(முதலாம் பக்கத் தொடர்)

டிஷ் தூதுவர் டேவிட் ஹத்தம், ரணில்விக்கிரமசிங்கவிடம் நேரடியாக பிரிட்டிஷ் அரசின் அழைப்புக் கடிதத்தை கையளித்தார்.

பிரிட்டனில் ஆட்சியில் இருந்த கன்சர்வேட்டிவ் கட்சியிடமிருந்து, தொழிற் கட்சிக்கு அதிகாரம் கைமாறி அக்கட்சி புதிய அரசாங்கத்தை அமைத்த பின்னர், ரணிலின் லண்டன் விஜயம் இடம்பெறுகிறது.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் ஒரே போக்கைக் கையாள்வது என்ற இணக்கப்பாட்டை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் ஏற்படுத்தியதில் முன்னைய பிரிட்டிஷ் அரசு முக்கிய பங்கு வகித்திருந்தது.

அந்த நடவடிக்கையின் அடுத்த கட்டம் தொடர்பாக ஆராயவே ரணில் பிரிட்டனுக்கு அழைக்கப்பட்டுள்ளார் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி - ரணில் உடன்பாட்டுக்குப் புத்துயிர் அளிக்கும் வகையில் லண்டனுக் ரணில் அழைக்கப்பட்டுள்ளதாகவும் ஒரு தகவல் தெரிவித்தது.

ரணில் விக்கிரமசிங்க லண்டனில் புதிய வெளிவிவகார அமைச்சர் ரொபின் குக்குடன் முதலில் பேசுவார்.

இப்பேச்சுக்கான நிகழ்ச்சி நிரலில் முதல் விடயமாக ஜனாதிபதி—ரணில் இணக்கப்பாட்டு விவகாரமே உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் மற்றும் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லியம் பொக்ஸ் ஆகியோர் உட்பட பலருடன் ரணில் பேச்சுக்கள் நடத்துவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-150-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02-06-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org